# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்.189/மா/2024**
**நாள் 14.02.2025**

திரு.B.சரவணன்,
சென்னை–600 017. ......... மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம் 9,
பெருநகர சென்னை மாநகராட்சி. ........ எதிர் மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, கண்ணம்மா பேட்டை, புது தெரு, கதவு எண்.1, என்ற முகவரியில் வசிக்கும் திரு.B.சரவணன் என்பவரின் 30.09.2024 நாளிட்ட மனு 30.09.2024 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 189/மா/2024 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

பெருநகர சென்னை மாநகராட்சி, கண்ணம்மா பேட்டை, புது தெரு, கதவு எண்.1, என்ற முகவரியில் வசிக்கும் திரு.B.சரவணன் என்பவர் தனது முறையீட்டு மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"மேற்கண்ட முகவரியில் வசிக்கும் நான் R.T.I சட்ட ஆர்வலர். சென்னை மாநகராட்சி சாலையை ஆக்கிரமித்து 25 அடி நீளம், 25 அடி அகலம் கான்கீரிட் வணிக வளாகம் கட்டி அதில் ஆவின் பால் பூத் இயங்குவதால் வாகனத்தில் செல்பவர்களுக்கு எதிர்புறம் வரும் வாகனங்கள் தெரியாமல் விபத்துக்கள் ஏற்படுவதாலும் மற்றும் தீயணைப்பு வாகனங்கள் அவ்வழியே செல்லமுடியாத நிலையில் இருப்பதால் 14.02.2024 அன்று சென்னை மாநகராட்சி ஆணையர், உதவி ஆணையர் மற்றும் உதவிப்பொறியாளர் இவர்களுக்கு மனு அளித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. மேலும் உள்ளாட்சி ஊழல் தடுப்பு இயக்குநர் மற்றும் தொடர்புடைய அனைத்து அதிகாரிகளுக்கும் மேல் முறையீடு செய்த மனுக்களும் அனுப்பியும் எந்த வித நடவடிக்கையும், பதிலறிக்கையும் இல்லாததால் இம்மனுவினை இரண்டாம் முறையாக மேல்முறையீடு செய்கிறேன். சென்னை மாநகராட்சி உதவிப்பொறியாளர் திரு. சரவணன் என்பவரை நேரிலும், செல்போனிலும் தொடர்பு கொண்டும் பல நாட்கள் கடந்து போன் செய்தாலும் எடுப்பதில்லை. சம்பந்தபட்ட சென்னை மாநகராட்சி அலுவலர் திரு.சரவணன் மற்றும் உயர் அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுக்க பரிந்துரை செய்யுமாறு

கேட்டுக்கொள்கிறேன். மேலும் நான் இது சம்பந்தமாக R.T.I கேள்வியை எழுப்பியும் வருவாய் துறையிடமிருந்து எந்தவித பதிலும் இல்லை. சென்னை மாநகராட்சி எப்போழுதோ அனுமதி அளித்த பால்பூத்தின் ஆக்கிரமிப்பை அகற்றியும் முழுமையான விசாரணை நடத்தியும் பொதுமக்கள் நலன் கருதி எங்களுக்கு நீதி கிடைக்க வழி செய்யுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்''.

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவம் 21.10.2024 நாளிட்ட அறிவிக்கை மூலம் சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது.

3. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் மண்டல அலுவலர் 03.12.2024 நாளிட்ட அறிக்கையில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

“பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 9, கோட்டம் 110 சரஸ்வதி தெருவில் அமைந்துள்ள ஆவின் பாலகம் கட்டிடம் அளவு 25X25 கொண்ட கட்டிடம் சரஸ்வதி சாலை 70 அடி ஸ்கீம் ரோடு சந்திப்பில் மகாலிங்கபுரம், நுங்கம்பாக்கம், சென்னை–34–ல் வாகனங்கள் செல்ல வேண்டிய பாதையில் இடையூறாக உள்ளதால் அதிகாரிகள் இந்த கட்டிடத்தை இடித்து தர வேண்டும் என்று முறையிட்டுள்ளார். மேலும் இக்கட்டிடம் பொது மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் போக்குவரத்து இடையூறு இல்லாமல் நடத்தப்பட்டு வருகிறது. இப்பாலம் தோராயமாக 15X10 அளவினை கொண்டுள்ளது. மேலும் புகார் தெரிவித்த 25X25 அளவில் இல்லை. மனுதாரர் ஏற்கனவே 14.02.2024 நாளிட்ட மனுவினை சென்னை மாநகராட்சியில் புகார் அளித்துள்ளார். மேலும் இப்புகார் மனுவினை மண்டல அலுவலர், மண்டலம் 9 அவர்கள் மூலமாக பொது மேலாளர் (Marketing) TCMPF Limited, Head office –ல் சென்னை மாநகராட்சியில் உரிய அனுமதி பெற்ற ஆணை மற்றும் அதன் விவரங்கள் அளிக்குமாறு 15.03.2024 அனுப்பப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையம் அவர்களின் கடிதத்தில் சென்னை நந்தனத்தில் உள்ள பழைய கட்டிடத்தினை இடித்து அதில் புதிதாக நிர்வாக அலுவலகம் கட்டப்பட்டது. கட்டுமான பணிக்கு ஏதுவாக அலுவலக கோப்பு மற்றும் ஆவணங்கள் வேறு இடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டதால் மேற்படி ஆவணங்கள் சமர்ப்பிக்க இயலவில்லை என்று 11.11.2024 நாளிட்ட கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்கள். விரைவில் இதற்குண்டான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படும் என தெரிவித்துள்ளார்கள்.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 24.01.2025 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 10.01.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 24.01.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

“சென்னை மாநகராட்சி சாலையை ஆக்கிரமித்து 25 அடி நீளம், 25 அடி அகலம் கான்கீரிட் வணிக வளாகம் கட்டி அதில் ஆவின் பால் பூத் இயங்குவதனால், அங்கு வாகனத்தில் செல்பவர்கள் எதிர்புறம் வரும் வாகனங்கள் தெரியாமல் விபத்துகள் ஏற்படுகிறது. மேலும் தீயணைப்பு வாகனம் அவ்வழியாக செல்ல முடியாத நிலை உள்ளது. இது குறித்தான புகார் 14.02.2024 அன்று பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலகத்தில் உள்ள அனைத்து அதிகாரிகளுக்கும் அளித்தும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் இல்லை. இது குறித்து உதவிப்பொறியாளர் அவர்களுக்கு நேரிலும், தொலைபேசியிலும் தெரிவித்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. மேற்கண்ட ஆவின் பால் பூத்திற்கு எப்போதோ அளித்த அனுமதியை வைத்து சட்ட விரோதமாக நடத்தப்படுகிறது.

எனவே, மேற்கண்ட எனது புகார் மனுவின் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு இம்முறைமன்ற நடுவர் அவர்களை தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.''

6. பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 9–ன் உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவிப்பொறியாளர் ஆகியோர் 24.01.2025 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்.

''பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 9, கோட்டம் 110–ல் 70 அடி ஸ்கீம் ரோடு சந்திப்பில் மகாலிங்கபுரம் நுங்கம்பாக்கம் என்ற இடத்தில் இயங்கி வரும் ஆவின் பாலகம் பொதுமக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் நடத்தப்பட்டு வருகிறது. மேலும் அக்கட்டடம் தோரயமாக 15 x 10 அடி அளவினை கொண்டுள்ளது. மேலும் புகாரில் தெரிவித்தவாறு 25 x 25 அடி அளவில் இல்லை என்பதை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் இந்த ஆவின் பூத் கட்டடம் பெருநகர சென்னை மாநகராட்சி அனுமதி அளித்த மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் கட்டப்பட்டுள்ளது. உரிய வாடகையும் செலுத்தப்பட்டு வருகிறது.

மனுதாரர் எற்கனவே இதே புகாரை 14.02.2024 அன்று பெருநகர சென்னை மாநகராட்சியில் அளித்த போது, அப்புகார் மீது மாவட்ட வருவாய் அலுவலர்/மண்டல அலுவலர் மண்டலம்–9 அவர்கள், பொது மேலாளர் (மார்கெட்டிங்) T.C.M.P.F லிமிடெட் தலைமையகம் அவர்களுக்கு பெருநகர சென்னை மாநகராட்சியின் அனுமதி பெற்ற ஆணை மற்றும் அதன் விவரங்களை அளிக்குமாறு 15.03.2024 நாளிட்ட கடிதத்தின் மூலம் நடவடிக்கை கேட்டுக் கொள்ளப்பட்டது. தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையத்தின் பொதுமேலாளர் (விற்பனை) அவர்கள் 11.11.2024 நாளிட்ட தனது கடிதத்தில் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையத்தின் பழைய கட்டிடத்தினை இடித்து அதில் புதிதாக நிர்வாக அலுவலகம் கட்டப்பட்டது என்றும், கட்டுமான பணிக்கு ஏதுவாக அலுவலக கோப்பு மற்றும் ஆவணங்கள் வேறு இடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டதால் மேற்படி ஆவணங்கள் சமர்பிக்க இயலவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

இருப்பினும் கள ஆய்வு மேற்கொண்டு, போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படா வண்ணம் அமையுமாறு உரிய அதிகாரிகளுடன் ஆலோசனை செய்து மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை இம்முறை மன்ற நடுவர்அவர்களுக்கு தாழ்மையுடன் தெரிவித்து கொள்கிறோம்.''

7. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவிப்பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறை மன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

மனுதாரர் சென்னை நுங்கம்பாக்கம் சரஸ்வதி தெரு மற்றும் 70 அடி சாலையின் சந்திப்பில் சுமார் 25x25 அடி அகலத்தில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான சாலையை ஆக்கிரமித்து கட்டிடம் கட்டப்பட்டு அதில் ஆவின் பூத் இயங்குகிறது என்றும் அதனால், அந்த சந்திப்பில் வரும் வாகனங்கள் குறிப்பாக தீயணைப்பு மற்றும் ஆம்புலன்ஸ் ஆகிய வாகனங்கள் செல்ல இயலாத நிலையில் உள்ளதாலும், மற்ற வாகனங்களால் அங்கு விபத்து ஏற்படுவதாக, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் அலுவலகத்தில் புகார் மனு அளித்தும் இது வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று தெரிவித்து, அக்கட்டிடத்தை இடிக்குமாறும், தன் மனு மீது நடவடிக்கை எடுக்காத பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள கட்டிடத்தில் இயங்கும் ஆவின்பூத் அப்பகுதி பொதுமக்களின் தேவைகளை பூர்த்தி செய்து வருவதும், புகாரில் தெரிவித்துள்ளவாறு அக்கட்டிடம் 25x25 அடி அளவில் இல்லாமல் 15x10 அடி அளவில் உள்ளதும் ஏற்கனவே மனுதாரரால் அளிக்கப்பட்ட இந்நேர்வு தொடர்பான மனு குறித்து பொதுமேலாளர் (மார்கேட்டிங்) T.C.M.P.F லிமிடெட் தலைமையகம் பெருநகர சென்னை மாநகராட்சியால் அனுமதி ஆணை மற்றும் விவரங்கள் கோரப்பட்டதும், சென்னை நந்தனத்தில் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தின் பழைய கட்டிடம் இடித்து புதிய நிர்வாக அலுவலகம் கட்டப்பட்டதால், கோப்பு மற்றும் ஆவணங்கள் வேறு இடத்திற்கு மாற்றம் செய்ததால், கோரிய ஆவணங்கள் சமர்ப்பிக்க இயலவில்லை என்று தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தின் பொது மேலாளர் (விற்பனை) தெரிவித்து இருப்பதாலும், இருப்பினும், கள ஆய்வு மேற்கொண்டு போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படாவண்ணம் அமையுமாறு உரிய அதிகாரிகளுடன் ஆலோசனை செய்து மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் உதவி ஆணையரின் அறிக்கை மற்றும் உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவிப்பொறியாளர் ஆகியோரது வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

மனுதாரர் குறிப்பிட்ட கட்டிடத்தில் இயங்கி வருகின்ற ஆவின் பால்பூத் இருபுற சாலையின் சந்திப்பில் அமைந்து உள்ளது புகைப்படத்தின் வாயிலாக அறிய முடிகிறது. எனவே, அங்கு போக்குவரத்திற்கு இடையூறு ஏற்பட வாய்ப்பு உள்ளது என்பதால் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர், தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தின் மேலாண்மை இயக்குநருடன் கலந்தலோசித்து மேற்குறிப்பிட்ட ஆவின் பூத்தினை போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படாவண்ணம் அமைக்க அலுவலர்களுக்கு உரிய வழி காட்டுதலை அளித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள்14–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு.B.சரவணன்,
எண்.1, புது தெரு,
கண்ணம்மா பேட்டை,
தி.நகர், சென்னை–17.
2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–3.
3) மண்டல அலுவலர்,
மண்டலம் 9,
பெருநகர சென்னை மாநகராட்சி,
எண்.1, லேக் ஏரியா, 4வது குறுக்கு தெரு,
நுங்கம்பாக்கம்,
சென்னை–600 034.
4) மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்,
2, முத்துராமலிங்கம் சாலை, நந்தனம்,
சென்னை–35.

5) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028.

6) இணை இயக்குநர்,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028.

நகல்:

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

சட்ட ஆலோசகர்/செயலாளர் (FAC).